வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 4803/ அ3 / 2022 நாள் .01.2024

பொருள் பள்ளிக்கல்வி – பள்ளிக் கல்வி துறையின் கீழ் செயல்படும் அரசு / மேல்நிலை / உயர்நிலைப் பள்ளிகளில் 2023-2024 ஆம் கல்வியாண்டில் காலிபணிடங்கள் – நேரடி நியமனம் / பதவி உயர்வு மூலம் நிரப்பும் வரை – பள்ளி மேலாண்மை குழுவின் மூலம் தகுதி வாய்ந்த நபர்களை கொண்டு தற்காலிக அடிப்படையில் காலிபணியிடங்கள் நிரப்பப்பட்டமை - பணியாற்றும் தற்காலிக ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை பெறப்பட்டது – டிசம்பர் 2023 நிதி ஒதுக்கீடு பகிர்ந்தளித்தல் – சார்ந்த தலைமைஆசிரியர்களுக்கு நிதி அதிகாரம் வழங்குதல்-சார்பாக

பார்வை

1. அரசாணைநிலை எண் 07 பள்ளிக் கல்வி பக(5) த் துறை நாள் 07.01.2023
2. பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண் 34087/ சி2/இ2/2022 நாள் 02.06.2023
3. சார்ந்த பள்ளி தலைமைஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள்

பார்வையில் காணும் அரசாணை மற்றும் செயல்முறைகளின் படி, பள்ளிக் கல்வி துறையின் கீழ் செயல்படும் அரசு / மேல்நிலை / உயர்நிலைப் பள்ளிகளில் 2023-2024 ஆம் கல்வியாண்டில் காலிபணிடங்கள் – நேரடி நியமனம் / பதவி உயர்வு மூலம் நிரப்பும் வரை பள்ளி மேலாண்மை குழுவின் மூலம் தகுதி வாய்ந்த நபர்களை கொண்டு தொகுப்பூதியத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்து அனுமதி மற்றும் வழிகாட்டுநெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது

இவ்வகையில் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 2023 – 2024 ஆம் கல்வியாண்டில் காலிபணியிடங்கள் பணியில் உள்ள ஆசிரியர்கள் மகப்பேறு விடுப்பில் சென்றதால் ஏற்பட்ட காலிப்பணியிடங்கள் மற்றும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருந்து அவற்றுள் மூத்த பட்டதாரி / முதுகலை ஆசிரியர் ஆசிரியர் பொறுப்பு ஆசிரியராக பணிபுரிவதால் பதிலியாக பள்ளி மேலாண்மைக் குழு மூலம் நியமனம் செய்யப்பட்ட தற்காலிக பட்டதாரி / முதுகலை ஆசிரியர்களுக்கான மதிப்பூதியம் மாதம் ஒன்றுக்கு முறையே ரூ.15000/ - மற்றும் ரூ.18000/- என நிர்ணயிக்கப்பட்டு பார்வை 2ல் காணும் செயல்முறைகளின் படி நிதி ஒதுக்கீடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் வேலூர், மாவட்டத்திலுள்ள பள்ளிகளில் தலைமை ஆசிரியர் பணியிடங்கள் முதுகலை / பட்டதாரி ஆசிரியர் காலிப்பணியிடங்களில் 175 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் 52 முதுகலை ஆசிரியர் பணியிடங்களுக்கு தொகுப்பூதியத்தில் தற்காலிக அடிப்படையில் பள்ளி மேலாண்மை குழு மூலம் நிரப்பபட்டுள்ளது. மேற்படி நியமனம் செய்யப்பட்ட நபர்களுக்கு அவரவர்

நியமனம் செய்யப்பட்ட தேதிகளில் அதாவது அக்டோபர் / நவம்பர் 2023 வரை பணிபுரிந்த நாட்களுக்கான / மாதங்களுக்கான ஊதியம் சார்ந்த தற்காலிக ஆசிரியர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக ECS மூலம் அனுப்பபட வேண்டும். எக்காரணம் கொண்டும் தலைமைஆசிரியர்களின் வங்கி கணக்கில் வரவு வைத்து ஆசிரியர்களுக்கு பணமாக பகிர்ந்தளிக்கப்பட கூடாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்காண் தொகையானது பார்வை 1 ல் காண் அரசாணையின் படி, கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பட்டியல் தயாரித்து உரிய கருவூலக அலுவலகத்தில் பட்டியல் தயாரித்து சார்ந்த நபர்களுக்கு ஊதியம் பெற்று வழங்கிட நிதி அதிகாரம் சார்ந்த தலைமைஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும் அந்நபர்களுக்கு மேற்காண் மாதங்களுக்கான பற்றுச் சீட்டு மற்றும் IFHRMS ECS Report ஆகியவை இவ்வலுவலக அ4 பிரிவில் முதுகலை ஆசிரியர்களுக்கான விவரமும், பட்டதாரி ஆசிரியர் விவரம் அ3 பிரிவிலும் 12.01.2024 3.00 மணிக்குள் ஒப்படைக்க சார்ந்த பள்ளி தலைமைஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2202 – பொதுக்கல்வி – 02 இடைநிலைக் கல்வி
109 அரசு இடைநிலைப்பள்ளிகள் – மாநில செலவினங்கள்–
AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்
மற்றும் பணியாளர்களின் சம்பளம் – 333 தொழில்முறை சிறப்பு
பணிகளுக்கு தொகை கொடுத்தல் – 04 ஒப்பந்த ஊதியம்
(த.தொ.கு.2202–02–109–AA 333 – 04)

**இணைப்பு**

தற்காலிக ஆசிரியர்கள் பணிபுரிந்த நாட்கள் விவரம் (டிசம்பர்)

பற்றுச்சீட்டு மாதிரி படிவம்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்

**பெறுநர்**

1. சார்ந்த பள்ளி தலைமைஆசிரியர்களுக்கு தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கருவூலக அலுவலர் /சார் கருவூலக அலுவலர்கள் வேலூர் மாவட்டம்.
3. இவ்வலுவலக அ2 பிரிவிற்கு IFHRMS மூலம் பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கீடு பகிர்ந்தளிக்கும் பொருட்டு அனுப்பலாகிறது.

**பற்றுச்சீட்டு**

**(பட்டதாரி ஆசிரியர்கள் மட்டும்)**

2023-2024 ஆம் கல்வியாண்டில் பள்ளி மேலாண்மை குழுவின் மூலம் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு அக்டோபர் / நவம்பர் 2023 வரை ஊதியம் பெற்று வழங்கப்பட்ட விவரம் பணிந்தனுப்பபடுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | பாடம் | பணிபுரிந்த நாட்கள் | பணிபுரிந்த மாதங்கள் அக்டோபர்/ நவம்பர் 2023 வரை | தொகை | கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

**இணைப்பு**

சார்ந்த தற்காலிக ஆசிரியருக்கு ஊதியம் பெற்று வழங்கப்பட்ட IFHRMS ECS நகல்

தலைமைஆசிரியர் கையொப்பம் பள்ளி முத்திரையுடன்

**பற்றுச்சீட்டு**

**( முதுகலை ஆசிரியர்கள் மட்டும் )**

2023-2024 ஆம் கல்வியாண்டில் பள்ளி மேலாண்மை குழுவின் மூலம் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட முதுகலை ஆசிரியர்களுக்கு அக்டோபர் / நவம்பர் 2023 வரை ஊதியம் பெற்று வழங்கப்பட்ட விவரம் பணிந்தனுப்பபடுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | பாடம் | பணிபுரிந்த நாட்கள் | பணிபுரிந்த மாதங்கள் (அக்டோபர் / நவம்பர் 2023 வரை ) | தொகை | கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

**இணைப்பு**

சார்ந்த தற்காலிக ஆசிரியருக்கு ஊதியம் பெற்று வழங்கப்பட்ட IFHRMS ECS நகல்

தலைமைஆசிரியர் கையொப்பம் பள்ளி முத்திரையுடன்